# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 7-1-62 ஞாயிறு | இதழ் 30


இப்படியும் நடக்கலாம்!

## தமிழரசார் சேரக்கூடிய அரசாங்கப் ?

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள திடீர் நிலைமை காரணமாக அரசாங்கத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டேயாகவேண்டுமென்று அரசியல் அவதானிகள் ஜோஸ்யம் கூறுகிறார்கள். அந்த மாற்றம் பின்வருவனவற்றுள் ஒன்றாக அமையலாம்.

1. அரசாங்கக் கட்சியிலுள்ள பீலிக்ஸ் கோஷ்டியினரில் சிலர் யூ. என பி யுடன் சேர்ந்து புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவக்கூடும் ஆனால் இந்தக் கோஷ்டியினர் விரும்புவதுபோல பீலிக்ஸை பிரதமராகவும், ஸ்ரீமாவைக் கவர்னர் ஜெனரலாகவும் ஏற்றுக்கொள்வதற்கு யூ. என். பி. காரர்கள் விரும்பமாட்டார்களென்றும் கூறப்படுகிறது.

2. சி. பி. டி. சில்வா, மைத்திரிபாலா கோஷ்டியினர், இடதுசாரிகளையும், தமிழரசுக்கட்சியினரையும் சேர்த்து ஒரு தேசிய அரசாங்கத்தை அமைக்க விரும்பக்கூடுமென்று தெரிகிறது. இத்தகைய 'தேசிய' அரசாங்கத்தை அமைப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் பலருக்கும் கூடிய விருப்பம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

3. இவற்றைவிட சற்றும் எதிர்பாராத 'புதியமுறையில் அரசியல் திருப்பம் ஏற்பட்டாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஸ்டாலின் விஷயத்தில்

# குருஷேவ் செய்தது என்ன? அமெரிக்கப் பத்திரிகைகள்

## உண்மையைப் புரட்டினவா! ரஷியாவில் நடந்ததென்ன?

சில மாதங்களுக்குமுன்பு ரஷ்யாவிலிருந்துஒருபுதிய கூக்குரல் கிளம்பியது-அல்லது, அப்படிக் கிளம்பியதாக நாம் பத்திரிகைகளில் படித்தோம், 'ரஷ்யாவின் மாபெரும் சர்வாதிகாரியாகத் திகழ்ந்தவரும், ரஷ்யநாட்டை பலம்பொருந்திய இரும்புக் கோட்டையாக மாற்றி அமைத்த மகாதீரருமான ஸ்டாலின்மீது இன்றைய ரஷ்யத் தலைவர் குருஷேவ் வஞ்சம் தீர்க்கிறார்" என்ற செய்திகள் எல்லாப்பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஸ்டாலின் பெயரால் வழங்கப்பட்டநகரத்தின்பெயரும், வேறு நினைவுச் சின்னங்களும் பெயர்மாற்றி அமைக்கப்பட்டன. லெனினுடைய சமாதிக்குப்பக்கத்தில் பக்தியோடுவைக்கப், பட்டிருந்தஸ்டாலின்பிரேதம், அங்கிருந்து அகற்றப்பட்டு சாதாரணமாகப் புதைக்கப்பட்டது. ஸ்டாலினுடைய 'கொடுங்கோன்மை' யைப்பற்றி குருஷேவ் அறிக்கைகள் விட்டிருந்தார்......

ஆனால் உண்மையில் நடந்ததென்ன?

சோவியத் நாட்டின் மிக முக்கியமான நிர்மாணபுருஷரான ஸ்டாலினை. மிக மோசமான முறையில்-மனிதப் பண்பாடேயில்லாமல் குருஷேவ் பழிவாங்கிவிட்டாரா? இன்னும் சில கற்பனைவாதிகள் கூறியதுபோல, லெனினுக்குப்பக்கத்தில் ஸ்டாலின் பிடித்திருந்த மாட்சிமை பொருந்திய இடத்தை குருஷேவ் தமக்காக ஒதுக்கிக்கொண்டாரா?

அறிவும் ஆற்றலும் மதியூகமும் கொண்டகுருஷேவ், இப்படிச்செய்தால் தமக்கு 'அபகீர்த்தி' ஏற்படுமென்பதைச் சற்றேனும் சிந்தியாமல்முட்டாள்தனமாகநடந்துகொண்டதாக நம்பமுடியவில்லையே!

### இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மௌனம் சாதிப்பது ஏன்?

இதைக்குறித்து எமது இலங்கைக்கம்யூனிஸ்ட்ஒருவரிடம் •அபிப்பிராயங்கேட்டபோது அவர் முதலில் எதுவும் கூறமறுத்துவிட்டார். ஏனென்றால், இதுபற்றி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் கருத்து வெளியிடவில்லையாம்! ஆகவே, கட்சியின் கருத்து வெளியாகு முன்பு தாம் கருத்து வெளியிடுவது சரியல்ல என்று கூறினர். (எமது தமிழரசுத்தலைவர் நாகநாதன் அவர்களுக்குச் சமர்ப்பணம்!) அவருடைய பெயரைநாம் வெளியிடப் போவதில்லையென்று உறுதி கூறியதன் பேரில் அவர் தமது தனிப்பட்ட கருத்தைச் சொன்னதாவது:

"ஸ்டாலினைக் குறித்து குருஷேவ் மிகவும் பராட்டிப் பேசியிருக்கிறார்! சோவியத்நாட்டின் மிகச் சிறந்த ஒரு தலைவரென்றும், நிர்மாண புருஷ ரென்றும் ஸ்டாலினை அவர்பாராட்டியிருக்கிறார். ஆனாலும், அவரிடம் உள்ள சில குறைகளைஎடுத்துக்காட்டி, மகாபுருஷரான லெனினோடு சரிசமமான அந்தஸ்தை அவருக்கு அளிக்கப்படுவதையே அவர் எதிர்த்து நடவடிக்கை எடுத்துள்ளார். லெனினுக்கு கொடுக்கப்பட்ட அளவுக்கு-இன்னும் சற்று மேலாகவே •ஸ்டாலினுக்கு கௌரவம் வழங்கப்பட்டதையே குருஷேவ் எதிர்த்தார். இதை முதலாளித்துவ - முக்கியமாக அமெரிக்கப் பத்திரிகைகள் ஒரேயடியாகத் திரித்து உலகெங்கும்செய்திகளைப் பரப்பி விட்டன. ஸ்டாலினைப் பற்றிக் குருஷேவ்புகழ்ந்துபேசிய அதிகமான பக்கங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவரைப்பற்றிக் குற்றம் கூறிய சில-பக்கங்களையே இந்தப்பத்திரிகைகள் முற்றுமுழுதாகப் பிரசுரித்தன.

"இந்தச் சம்பவத்தை வைத்துக்கொண்டு, சோவியத்தலைவர்களுக்கும், அவர்களுடையகொள்கைகளுக்கும் முதலாளித்துவப் பத்திரிகைகள் மாசுகற்பிக்கக் குதூகலித்து எழுந்துவிட்டன!-ஆனால் இது, உண்மையைச் சரியாகத் தெரிந்து கொள்ள விரும்பும் வாசகர்களுக்குச் செய்யப்பட்ட மகத்தான துரோகமாகும்! உண்மையை என்றுமே மூடி வைக்க முடியாது! ஸ்டாலின் இறப்பதற்கு முன்னால், 'ரஷ்யாவில் மதசுதந்திரமில்லை; அங்கு கோயில்களேஇல்லை' என்று ஒரேயடியாகமூடி மறைத்த பத்திரிகைகள் கூட, ஸ்டாலினின் மரணச்செய்தியை வெளியிட்ட மகிழ்ச்சியில், 'அவர் இறந்த போது ரஷ்ய நாடெங்குமுள்ள ஆலய மணிகள் ஒலித்தன' என்று வர்ணித்ததைப்படித்தோமல்லவா?"

இவ்வாறு எமது கம்யூனிஸ்ட் நண்பர் தெரிவித்தார்.

## வேலை நிறுத்தம்!

வெள்ளிக்கிழமை வேலை நிறுத்தம் சம்பந்தமாக தனது அனுமதியற்ற எவ்வித தகவலையும் வெளியிடக்கூடாதென்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதால், பரபரப்பான பல செய்திகளை நாம் வெளியிட முடியவில்லை. அதுபோலவே அது சம்பந்தமாக 'மாலா' வரைந்த கார்ட்டூனையும் வெளியிட முடியவில்லையென்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இத்தால்... சகலரும் அறிவது!

## பல்லாண்டு வாழட்டும்!

சுவையான செய்திகளைச் சூடாகத் தந்திடும் 'புதினம்' பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்!

சென்னை. 7 — கோமதி ஸ்வாமிநாதன்.

## தொப்பிபோடும் நேரு!

கடந்த 24-11-61 புதினத்தில் 'தொப்பி போடுவதில் சிறந்த மனிதர்' என்ற விஷயத்தைப் படித்தேன் நேரு போடும் தொப்பியை விடவா மற்றவர்கள் போடும் தொப்பி அழகாக இருக்கின்றது?

மிருவோடை. — எம். வி. எச். மொகமட்.

## பலே நிருபர்!

உங்கள் மட்டக்களப்பு நிருபர் பலே ஆசாமிபோலிருக்கிறாரே! கோழிக் களவு விஷயத்தை உள்ளதை உள்ளபடி அப்படியே அம்பலப்படுத்திவிட்டார்......இனி இந்தமாதிரியான கோழிக் கள்ளர்கள், கோழிமயிரைக் கூடத்தொடமாட்டார்கள் போலிருக்கிறதே!

சிங்களவாடி. — கு, சற்குணம்.

## பச்சோந்திப் புதினம்?

'புதினம்' தமிழரசுக் கட்சியை ஆதரிக்கிறது என்று காண்டீபன் சொல்கிருர்....'புதினம்' சர்வகட்சிப் பத்திரிகை என்பதற்கு, புதினம் என்ற தலைப்பு சென்ற வாரம் நீலத்திலும் இந்த வாரம் கறுப்பிலும், அடுத்தவாரம் சிவப்பிலுமாக மாறிமாறி வருவதே ஒரு எடுத்துக்காட்டு!

வெலிகாமம். — ஏ. டபிள்யூ. எம். காமில்.

## பாதை சீர்கேடு!

மண்டூர், வெல்லாவளிப் பாதை மிகவும் மோசமாக இருப்பதால் வாகனப் போக்குவரத்துக்கு மிகவும் சங்கடமாக இருக்கின்றது. இப் பகுதிக்கு பொலிஸ்காரர்கள் வருவதற்குக் கூட மிகவும் காலதாமதம் ஏற்படுகின்றது!

மண்டூர். — அருள் பேரின்பநாயகம்

## தமிழ்வாணன்—புலித்தேவன் தகராறு!

'கல்கண்டு' ஆசிரியர் தமிழ்வாணன் 'புரட்சிவீரன் புலித்தேவன்' படமெடுக்கும் முயற்சியைக் கைவிட்டதற்கு, நடிகர் ஈ. ஆர். சகாதேவனுடன் ஏற்பட்ட தகராறுதான் காரணம் என்று ஒரு பத்திரிகையில் படித்தேன்!

பதுளை. கே. சுசீந்திரன்.

## சினிமா மோசடி!

'சினிமாப்படம் பிடிக்கிறோம்' என்று சொல்லிக் கொண்டு, இளைஞர்களிடம் பணம் பிடுங்குவதையும்; கன்னியர்களின் கற்பைச் சூரையாடுவதையும் தொழிலாகக்கொண்டுள்ள கயவர்களின் விஷயத்தை அவ்வப்போது அம்பலப்படுத்திவரும் புதினத்திற்கு நன்றி செலுத்தப் பொதுமக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்! ......ஆனாலும், ஏமாறுகிறவர்கள் இருக்கும்வரை, ஏமாற்றுகிறவர்களும் இருக்கத்தானே செய்வார்கள்?

தெமட்டகொடை. — செல்வி பி. ராணி.

## வெற்றியளிக்கட்டும்!

தீண்டாமையை ஒழிக்க ஆசிரியர் "இறைபுகழ் வாழி" மேற்கொண்டுள்ள உண்ணாவிரதம் வெற்றியளிக்க வாழ்த்துகிறேன்!

கோப்பாய் — க. சிவசுப்பிரமணியம்.

## 'செய்திகளை முந்தித்தரும்' புதினம்!

சென்ற வாரம் வெளியான புதினத்தில் அரசாங்கப் பாராளுமன்றக் கூட்டம் கூடப்படாததன் காரணம் விளக்கப்பட்டிருந்தது. 'புதினம்' வெள்ளிக்கிழமைகளிலேயே விற்பனைக்குத் தயாராகிவிடுகிறது. சென்ற வெள்ளிக்கிழமை விற்பனைக்கு வந்த 'புதின'த்தில் வெளியான செய்திதான், சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த யூ. என். பி. பத்திரிகையிலும் இருக்கிறது வேறு எந்தத் தமிழ்ப் பத்திரிகைகளிலும் இந்தச் செய்தி இதுவரைக்கும் வெளிவராதது குறிப்பிடத்தக்கது. கொழும்பிலிருந்து வெளியாகும் பலம் மிக்க ஆங்கிலப் பத்திரிகை, செய்தியைத் தந்த அதே நேரத்திலேயே புதினமும் செய்தியைத் தந்தது யாழ்ப்பாணத்துக்கே ஒரு பெருமையாகும்!

யாழ்ப்பாணம் எஸ். கந்தசாமி.

# உங்கள் காலபலன்

**7-1-62 முதல் 13-1-62 வரை**

**மேடம்;** அதிகப்பிரயாசத்தின் பின் காரியசித்தி உண்டு. நண்பர்கள் மூலமாகப் பலவித உதவி கிட்டும். சில கஷ்டமான பிரயாணங்களை மேற்கொள்ள நேரிடலாம். அமைதியிராது.

**இடபம்:** நண்பர்களுடனும் உறவினருடனும் விரோதங்களும் தப்பபிப்பிராயங்களும் ஏற்படும். சிறு விபத்துக்கள் உண்டாகலாம். ஆனால் தொழிலில் முன்னேற்றமுண்டு. வார இறுதியில் தேகசுகவீனமுண்டு.

**மிதுனம்:** ஞாயிறு, திங்கள் வாரங்களை அவதானமாகக்கழிக்கவும். இந்நாட்களில் பொதுவாக எல்லா விஷயங்களிலும் அவதானமாக நடக்கவும். மிகுதிநாட்களில் தொழில் ஓரளவு முன்னேற்றமுண்டு.

**கடகம்:** முதலிரண்டு நாட்களில் தொழில் முன்னேற்றமுண்டு செவ்வாய், புதன், வியாழன் காலையை அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்கள் நன்மைபயக்கக் கூடியன.

**சிங்கம்:** வார முற்பகுதியில் தொழிலில் முன்னேற்றமுண்டு. பொருள் லாபமும் கிட்டும். ஆனால் வியாழனன்று சில சங்கடங்கள் நேரிடலாம் வெள்ளிக் கிழமையும் சனிக் கிழமையும் அவதானம்.

**கன்னி:** வீண் குறைகள் கேட்கநேரிடலாம் தேகசுகமும் சிறிது பாதிக்கப் படும். உறவினருடன் விரோதங்களும் ஏற்படும். ஆனால் தொழிலைப் பொறுத்தவரை பலமுன்னேற்றங்களுண்டு,

**துலாம்:** உங்கள் முயற்சிகளில் மேலதிகமான லாபமடைவதுடன் எதிர்ப்புகளைச் சமாளித்து வெற்றிகாணவும் முடியும். ஆனால் மேலதிகாரிகளுடன் அவதானமாக நடக்கவும்.

**விருச்சிகம்:** உங்கள் விஷயங்களில் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன நண்பர்கள் மூலமாகப் பலவித உதவி பேறுகள்உண்டு கமத்தொழிலும் முன்னேற்றமுண்டு. இருந்தும் சிறு குடும்பச் சச்சரவுகளும், மனக்கவலையும் வரும்.

**தநுசு:** எதிர்பார்த்திராத வகையில் சில லாபங்கள் கிட்டும், புதிய தொழில்களில் முதலீடு செய்வீர்கள். தேகநிலையிலும் அபிவிருத்தி காணப்படுகிறது. நண்பர்கள் சமயத்தில் பல உதவிசெய்வர்.

**மகரம்:** மனச் சஞ்சலம் ஏற்படும். குடும்பச் சூழ்நிலையும் திருப்திகரமாக இராது செலவுகள் அதிகமாகும் உறவினரால் கஷ்டமேற்படும்.

**கும்பம்:** எதிர்ப்புகளைச் சமாளித்து புதிய விஷயங்களில் முன்னேற்றங் காண்பீர்கள். எவ்விஷயத்திலும் வெற்றியுண்டு. லாபமும் கிட்டும் ஆனால் செலவினங்களுமதிகமாகும்.

**மீனம்:** தொடர்ந்து நல்ல பலன்கள் நடைபெறும். எதிர்காலத்துக்கான திட்டங்கள் போட்டு முன்னேற முடியும் கல்வியிலும் மந்தமான முன்னேற்றங்களும் உண்டு.

— ரவிசோதிடர்

# திரை மறைவில்

## இலங்கரத்தினவிற்கு கிடைத்த மரியாதை!

வர்த்தக, உணவு, கப்பல் போக்குவரத்து அமைச்சரான திரு இலங்கரத்தின சமீபத்தில் மாத்தளைக்குச் சென்றபோது அவருக்குக் கிடைத்த வரவேற்பை நேயர்கள் அறிந்திருப்பது நல்லது. மாத்தளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுவிழாவில் கலந்துகொள்வதற்காக இவர் மாத்தளைக்கு வந்திருந்தார் இவர் வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னால் இவரை வரவேற்கக் காத்துநின்ற கறுப்புக்கொடிகளைப் பொலீசார், அவசரம் அவசரமாக அகற்றினர் இவரை வரவேற்பதற்காக அலங்கரிக்கப்பட்ட பந்தலுக்கு யாரோ தீவைத்துவிட்டார்கள். கடைசியாக இவர் வந்தபோது கண்டனச் சுலோகங்கள் நிறைந்த அட்டைகள் பல இவரை வரவேற்றன. கூட்டத்தில் இவர் பேச ஆரம்பித்ததும், பல கேள்விகள் கேட்கப்பட்டன இவர் பேசும்போதெல்லாம் பலர் இவரதுபேச்சை இடைமறித்துக் கூச்சலிட்டனர். ஒருவாறு தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பினர் நமது மந்திரி அவர்கள்!

## யூ. என். பி. யைத்தாக்கவேண்டாமென்று கூறும் சுதந்திரக்கட்சி எம். பி.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பலரே இப்போது அரசாங்கத்தைக் கண்டித்துப் பேச ஆரம்பித்துள்ளார்கள். இவர்களில் முக்கியமானவராகக் களனி எம். பி யான திரு ஆர். எஸ். பெரேரா அவர்களைக் குறிப்பிடலாம். இவர் தான்சமீபத்தில் ரத்தினபுரியில்நடந்த சுதந்திரக்கட்சிமாநாட்டில் பின்வருமாறு பேசியவர் என்பது குறிப்பிடத்தக்கது. "ஒன்றரை வருட காலமாக ஆண்டுவரும் சுதந்திரக்கட்சி இது வரைக்கும் சாதித்தது என்ன? யூ. என் பியைச் சும்மா தாக்கிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. பிரச்சினைகள் பல இன்னமும் ஏன் தீர்க்கப்படவில்லை என்பதை நமது மந்திரிகள், நமது பிரதிநிதிகளுக்கு விளக்கவேண்டும். பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப்பற்றிக் கதை அளப்பதில் பிரயோசனமில்லை. அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். தேர்தல் ஒன்றைச் சந்திக்கவேண்டி நேரிடுமென்பதையும் நாம் உணர்ந்திருப்பது நல்லது."

## 'சீனி'க்குக் குறைந்த விலை:

வெள்ளைச் சீனியின் விலையை அரசாங்கம் ஐந்து சதம் குறைத்தது உங்களுக்குத் தெரிந்ததே! ஆனால் இந்த 'விலைக்குறைப்பு' நடந்த அதே சமயத்தில் கறுப்புச்சீனி எதுவும் அடுத்த பன்னிரண்டு மாதகாலத்திற்கு இறக்குமதி செய்யப்படக்கூடாதென்று நமது நிதிமந்திரி உத்தர போட்ட சங்கதி பலருக்குத் தெரியாமலிருக்கலாம் 55 சதம் கொடுத்துக் கறுத்தச் சீனி வாங்கிய ஒவ்வொருவரும் இனிமேல் 62 சதம் கொடுத்து வெள்ளைச்சீனி வாங்கவேண்டும். முன்னர் கறுத்தச்சீனி வாங்கிய ஒவ்வொருவரும் இனிமேல் 7 சதம் நட்டப்பட்டே ஆகவேண்டும்! (இங்கே கொழும்பு விலைகளே குறிக்கப்பட்டுள்ளன)

## பெண்களும் நியமிக்கப்பட்டார்கள்...... ஆனால் .....?

இந்த நாட்டின் பிரதமரும் சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அவர்கள் சமீபத்தில் சுதந்திரக் கட்சியின் செயற் குழுவிற்குச் சில பெண்களையும் நியமித்துள்ளார்கள் என்ற செய்தி கிடைத்ததும் எனக்கு மெத்த மகிழ்ச்சியாக இருந்தது 'திறமையுள்ள பெண்களுக்கு உரிய இடம் கொடுத்துக் கௌரவிக்கவேண்டும்' என்ற கொள்கையில் எனக்குப் பற்றுதல் உண்டு ஆனால் பிரதமர் செயல் குழுவிற்கு நியமித்த பெண்களின் பெயர்களைக் கண்டதும் எனக்கு ஒரே ஏமாற்றம்தான் மிஞ்சியது. மந்திரிகளான இலங்கரத்தின, பதியுதீன்முகமது, கலுகல்லே, மகாநாம சமரவீர ஆகியோரது மனைவிமாரையும் பேருவளை எம் பி யான காசிமின் மனைவியையுந்தான் பிரதமர்கட்சிச் செயல் குழுவில் நியமித்துள்ளார். அரசியல் சமூக துறையிலோ அல்லது கட்சியின் வளர்ச்சிக்காகவோ இவர்கள் என்ன தொண்டு செய்திருக்கிறார்கள் என்பதை நான் அறியேன்!

## 'சுத்துமாத்து'

நீர்கொழும்பு, பதுளை, மாத்தறை ஆகிய இடங்களிலுள்ள வாடிவீடுகளைப் பாவிப்பவர்கள் (Rest House keepers) யூ என். பி. ஆதரவாளர்கள் என்பது எப்படியோ அரசாங்கத்துக்கு மணத்துவிட்டது. நீர்கொழும்பிலுள்ளவர் பதுளைக்கும் பதுளையிலுள்ளவர் மாத்தறைக்கும் மாத்தறையிலுள்ளவர் நீர்கொழும்புக்குமாக உடனடியாக மாற்றப்பட்டனர். ஆனால் நீர்கொழும்பு ஆசாமி பெரிய ஆள்! விஷயத்தை அம்பலப்படுத்தி கோர்ட் வரைக்கும் செல்லத் துணிந்துவிட்டார். மாற்றல் உத்தரவுகள் உடனே ரத்துச் செய்யப்பட்டுவிட்டன!

### வடபகுதி ஆசிரியர் சங்கம் நடாத்திய

# ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில்

## ஆசிரிய உலகிற்கே அவமானச் சம்பவங்கள்!

சென்றவாரம் வடபகுதியில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குப் பரீட்சை நடைபெற்றது யாவரும் அறிந்ததே. இந்தப் பரீட்சையை வடமாகாண ஆசிரியர் சங்கம் நடாத்தியது. எல்லாப் பாடசாலைகளிலிருந்தும் பெருந்தொகையான மாணவர்கள் இப்பரீட்சையில் பங்குபற்றினார்கள். ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஐந்து ஆறு பாடசாலை மாணவர்களை ஒரு மத்திய இடத்தில் வரவழைத்து பரீட்சை நடத்தப் பட்டது. மேற்பார்வையாளர்களும் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

ஆனால் பல இடங்களிலும் நடந்ததென்ன தெரியுமா?

மேற்பார்வை செய்யப்போன ஆசிரியர்களின் அனுசரணையோடு மாணவர்களுக்கு விடைகள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. சில இடங்களில் மேற்பார்வை அதிகாரியே சொல்லிக்கொடுத்தாராம்! இன்னும் ஒருபடி மேலேபோய் கரும்பலகையில் விடையை எழுதி அதைப் பார்த்து எழுதும்படி விட்ட மகானுபாவர்களும் உண்டாம்!

இந்த வதந்திகளைக் கேள்வியுற்ற 'புதினம்' நிருபர் இது பற்றி வலிமேற்கிலுள்ள ஒரு தலைமையாசிரியரிடம் விசாரித்தபோது அவர் சொன்னதாவது:

"எங்கள் பாடசாலைகளிலிருந்து இருபத்தொரு பிள்ளைகள் பரீட்சை எழுதச்சென்றார்கள். எப்படித்தான் மிக மிக இலகுவாகப் பரீட்சித்தாலும்கூட அவர்களுள் மூன்று நாலுபேராவது நிச்சயம் 'பெயில்' ஆகியிருப்பார்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால் என்ன ஆச்சரியம்! இருபத்தொரு பேருமே சித்தியடைந்துவிட்டார்கள்! இருபத்தொருபேரும் ஒரேமாதிரி விடைகளும் எழுதியிருக்கிறார்கள். விசாரித்ததில் அவர்களுடைய பரீட்சை நடந்த நிலையத்தில், விடைகளைச் சொல்லிக் கொடுத்தார்களென்று தெரியவந்தது!"

அவர் மேலும் தெரிவிக்கையில், 'பரீட்சை என்று நடத்துவதானால், அதில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும். அப்படிச் செய்ய முடியவில்லையென்றால் ஆசிரிய சங்கம் அந்தப் பரீட்சை நடத்துவதையே விட்டொழிப்பது நல்லது' என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து பரீட்சைகளைப்பற்றி மேலும் விசாரிக்கப் புகுந்த புதினம் நிருபர் கடந்த மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. பரீட்சையைப் பற்றியும் சில சுவையான தகவல்களைச் சேகரித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜி. சி. ஈ. பரீட்சை நடைபெற்ற ஒரு நிலையத்தில் பரீட்சைநிலையப் பொறுப்பதிகாரியும் மேற்பார்வையாளர்களும், ஒத்துக்கொண்டு, தங்களைச் சேர்ந்த சிலமாணவர்களுக்கு 'உதவி' செய்தார்களாம். அவசர தேவைக்காகச் சில புத்தகங்களின் பக்கங்களையே கிளித்தெடுத்துக் கொண்டுபோய் சில மாணவர்களுக்குக் கொடுத்தார்களாம். இதைக் கவனித்த ஒரு பாடசாலையின் தலைமையாசிரியர், தாமும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அந்த மண்டபத்தில் பரீட்சை எழுதிக்கொண்டிருந்த தமது மகளுக்கு கணக்குகளைச் செய்துகொண்டுபோய்க் கொடுத்தாராம்!

அவரையே சந்தித்து புதினம் நிருபர் கேட்டபோது "எல்லாரும் செய்யும்போது நாங்களும் ஏன் சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்தாமலிருக்கவேண்டும்? ... மொத்தத்தில் இந்தப் 'பகிரங்கப் பரீட்சை' என்ற பேச்சை விட்டுவிட்டு. பாடசாலையில் ஆசிரியர்களையே 'ஏதோ பார்த்து' வகுப்பேற்ற அனுமதிக்கவிட்டார்களானால் இந்தக் 'கிரிசைகேடு'களுக்கு இடம் வராது!" என்றாராம்!

---

# "மாடு ஆடாமல் மணி ஆடுமா?"

## மட்டக்களப்பில் நடந்த சுவையான சம்பவம்!

அவளுடைய அம்மா வீட்டை விட்டு வெளியே கிளம்பிவிட்டால், அவள் பாடு கொண்டாட்டம்தான்! தன் 'தொழிலுக்கு இடையூறாக இருந்த கணவனையும் [நீலிக்கண்ணீர் வடித்து] ஏற்கனவே அவள் வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாள். அன்று தொடக்கம் அவளது குடிசை 'காதற் பள்ளி'யாக மாறிவிட்டது!. மட்டக்களப்பு நகரை அடுத்துள்ள புதூர் பகுதியின் குடியேற்றப் பூமியிலுள்ள ஒரு குடிசைதான், வள்ளியின் மகளுடைய பள்ளி. தாய் மனுஷி பட்டணம் போய்விட்டதென்றால் குட்டியின் பாடு குஷிதான். அங்கு வரும் புதுக்காதலனுடன் இன்பபுரியிலே சஞ்சரிக்கத் தொடங்கி விடுவாள் மகள். அந்தக் 'காதல்மன்னன்' கொஞ்சம் பக்கத்து வீட்டுக்காரனாயிருந்ததால், கொஞ்சம் நெருக்கமாகவே பழகத் தொடங்கிவிட்டான்!

கடந்த 25-12-61 அன்று, வள்ளி வெளியே எங்கோ போய்விட்டு வந்து குடிசைக்குள் புகுந்தபோது, பெரும் அதிர்ச்சி அடைந்துவிட்டாள் கடந்த சில நாட்களாக ஊரிலே புகைந்து கொண்டிருந்த கதை உண்மைதான் என்பதை ஊர்ஜிதப் படுத்துவது போல, ஊரில் 'பெரியமனிதர்' ஒருவரின் மகனுடன் தன் மகள் சல்லாபித்துக்கொண்டிருப்பதைக்கண்டாள் வள்ளி!

இன்னமும் என்ன தாமதம் அவளுக்கு? எடுத்தாள் விளக்குமாற்றை! தாய்க்காரி வள்ளியின் துணிச்சலைக் கண்ட வாலிபன், 'அவிழ்த்ததாம் கழுதை எடுத்ததாம் ஓட்டம்' என்று, தடதடவென்று எழுந்து ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

இந்த விஷயம் ஊர்முழுவதும் பரவிவிட்டது. அந்தப் 'பெரிய மனிதரின்' காதுகளில் விஷயம் எட்டியதும், வள்ளியின் குடிசையை நோக்கி ஓடிவந்தார் அவர்.

தறுதலையாகத் தட்டுக்கெட்டுக் குட்டிச் சுவராகப் போகும் தன் மகனைத் தட்டிப் பணிய வைப்பார் என்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவர் வந்த வரத்திலயே வள்ளியிடம் கேட்ட கேள்வி இதுதான்:

"மாடு ஆடாமல் மணி ஆடுமா வள்ளி? உன்னுடைய மகள் விரும்பாவிட்டால் அந்தப் பயல் இங்கே வந்திருப்பானா?"

இந்தக் கேள்வியை அவர் கேட்டதும் வள்ளியின் உதடுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டன. வாயடைத்துப்போய், 'பேசாமடந்தை'யாக அப்படியே நின்றுவிட்டாள் அவள்!

(மட்டக்களப்பு நிருபர்)

---

### 'எட்டுப்பேர் மகரத்தில் இணைவதாலே......'

### சென்னை இசைவிழாவில்

# எட்டுக் கிரகங்கள் பற்றி

## மதுரை சோமசுந்தரம் பாட்டு!

கடந்தமாதம் சென்னையில் சங்கீத 'சீஸன்' என்பது வாசகர்கள் அறிந்ததே! சென்னையில் நடைபெற்ற இசைவிழா நிகழ்ச்சிகளில், தமிழ்நாட்டின் பிரபல பாடகர்களும்; வாத்திய இசைவல்லுனர்களும்கலந்துகொண்டு ரசிகர்களை மகிழ்வித்தனர்.

தற்போது நாதசுர இசை மேதையாகத் திகழும் காருகுறிச்சி அருணசலத்திற்குத் தவில் வாசிப்பதற்காக, இலங்கையிலிருந்து, யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி சென்றிருந்தார்.

தமிழ்கூறும் நல்லுலகிலிருந்து கணக்கற்ற தமிழ் மக்கள், இசைவிழா நிகழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்காகச் சென்னை நகரை முற்றுகையிட்டிருந்தனர்!

கடந்தவாரம் சென்னை தமிழிசைச்சங்கத்தின்ஆதரவில், அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற இசைவிழாவில் பாடிய மதுரை சோமசுந்தரம், தமது கச்சேரியின் முடிவில், "எட்டுக்கிரகங்கள் மகரத்தில் சந்திப்பதைப் பற்றி உலக மக்கள் கவலையுற்றிருக்கின்றனர்..அதைப்பற்றி நாம் கவலைப்படத்தேவையில்லை. காரணம், ஆண்டவனருளால், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் திருப்பாடல்கள் நமக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாத வண்ணம் துணைநிற்கும்" என்ற பொருள்பட,

"எட்டுப்பேர் மகரத்தில்
இணைவதாலே ஏதும்
கேட்டுவிடுமோ என்று
ஏங்காதே மனமே
நட்டுவன் சிதம்பர
நாதனிருக்கையில்
ஞானசம்பந்தன் பாடல்
நமக்குத்துணையுண்டு"

என்ற காலத்திற்கேற்ற-கருத்தமைந்தபாடலை, மிக உருக்கமாகப் பாடி ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார்!


# பொங்கல் விசேஷ விற்பனை!

★ சோட்ஸ் ★ சேட்ஸ்
★ கவுண் ★ புஷ்சேட்

சிறந்த ரகங்களை நம்பிக்கையுடன் குறைந்த விலையில் வாங்கலாம்.

யாழ்ப்பாணம் றெடிமேட் ஸ்டோர்ஸ்
6, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## 'கோவா' எதிரொலி: போர்த்துக்கேயர்......

# இந்தியாவுக்கு வந்த கதையும், போன கதையும்!

கடந்த நானூற்று ஐம்பது ஆண்டுகளாக, கோவாவில் ஏகாதிபத்தியம் செலுத்திவந்த போர்த்துக் கேயர்களை, ஒரே தினத்தில் ஓட ஓட விரட்டி, இந்தியா கோவாவைக் கைப்பற்றியது!

—மகத்தான வெற்றிதான்!

இந்திய நாட்டுக்குள்ளேயே உள்ள கோவாவிலிருந்து 'ஒரு சில' போர்த்துக்கேயருடன் 'போர்' செய்துதானே கோவாவை இந்தியா மீட்டது!

—இதுவும் ஒரு வீரமா?

'கோவா விடுதலை' க்குப் பிறகு, இப்படி இரண்டு விதமான அபிப்பிராயங்கள் மக்கள் மனதிலே இருந்து வருகின்றன.

வீரத்தனத்தையோ, கோழைத் தனத்தையோ தெரிந்துகொள்வதல்ல, சில சரித்திரக்குறிப்புகளை மட்டும் தெளிவுபடுத்துவதே இக்கட்டுரையின்நோக்கம்.

—அதிலும், போர்த்துக்கேயர் பாரத நாட்டில்புகுந்ததற்குத் தமிழ்மக்களாகிய நாம் தான் முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்!

பண்டைக்கால முதலே பிறநாட்டு வணிகர்கள் தமிழகத்திற்குவந்து, தமிழர்களுடன் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்திருக்கின்றனர். முற்காலத்தில் தமிழ்நாட்டில் 'ஒபீர்' என்ற பெயருடைய ஒரு துறைமுகம் இருந்ததாம், கிறிஸ்துபிறப்பதற்கு ஆயிரம்ஆண்டுகளுக்குமுன்னர் பாலஸ்தீனத்தில் அரசு செலுத்திவந்த ஸொலமென் (King Solomon) என்ற அரசனின் கப்பல்கள், தமிழ்நாட்டில் ஓபீர் துறைமுகத்திற்கு வந்து, அங்கிருந்து முத்து,பவளம் தங்கம், சந்தனக்கட்டை, மயில் முதலிய பொருட்களை ஏற்றிச் சென்றதாகவும்; அக்காலத்தில் தாமிரவர்ணிநதிதீரத்திலிருந்த கொற்கைநகரில் பாண்டிய மன்னர்கள்அரசுசெலுத்திவந்ததாகவும் சரித்திர நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி என்ற சிற்றூரே அந்த ஓபீர் துறைமுகம் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள்அபிப்பிராயப்படுகிறார்கள். அதுபோலவே, தமிழகத்தில் விளையும்முத்துக்களையும், சங்குகளையும் பற்றிக் கேள்வியுற்ற போர்த்துக்கேயர்கள், அதில் வியாபாரம் செய்து லாபம் பெறுவதற்காகத் தமிழ்நாட்டுக்கு வந்துசேர்ந்தனராம்!

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், போர்த்துக்கல் தலைநகரான லிஸ்பனிலிருந்து புறப்பட்ட வாஸ்கோ டி காமா, பாரதத்தின் தென்னகத்தில், கள்ளிக்கோட்டையில் வந்து இறங்கினான், முதன் முதலில் இந்தியாவுக்கு வந்த போர்த்துக்கேயன் இவன்தான்!

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு 'மதராஸ்' என்று மற்றொரு பெயரும் உண்டு. இந்தப்பெயர் ஏற்பட்டதற்கு,போர்த்துக்கேயர் பாரதநாட்டில் - அதுவும் தமிழ்நாட்டில்,முதன் முதலில் குடியேறியதுதான் காரணம் என்று கூறப்படுகிறது. போர்த்துக்கேயர் இந்தியாவிற்கு வருவதற்குமுன்னர், மதராஸ் என்ற இடம் ஒன்று இருக்கவில்லை. அவர்களின் வருகைக்குப் பிறகுதான் அந்த நகரே நிர்மாணிக்கப்பட்டதாம்!

அந்தக்காலத்தில் நெய்தல் நிலத் தமிழர்களான பரதகுலமக்கள் வசித்து வந்த கடலோரப் பகுதிக்குப் பாய்க்கப்பல்களில் வந்து இறங்கினார்கள் போர்த்துக்கேயர்கள். பரதகுலத்தவர்கள் மீன்பிடிப்பதற்காக உபயோகிக்கும் கட்டுமரங்கள், கடற்கரையோரத்தில் வரிசையாக இருப்பதைத்தான் முதன்முதலாக இந்தியாவுக்குவந்த போர்த்துக்கேயர் கண்டனர். போர்துக்கேயமொழியில், 'மெதாரா' என்றால் மரக்கட்டை என்று அர்த்தமாம். கடலில் செலுத்த உபயோகிக்கப்பட்ட பெரிய மரக்கட்டைகளை (கட்டுமரங்களை) முதன் முதலாகக் கண்ணால் கண்ட போர்த்துக்கேயர்கள், அந்த இடத்திற்கு 'மேதாரஸ்' என்று பெயரிட்டனராம். இதுதான்பின்னர் 'மதராஸ்' என்றுமாறியதாகக்கூறப்படுகின்றது!

அதன் பின்னர் கி. பி. 1505-ம் ஆண்டு இலங்கையைக்கைப்பற்றிய போர்த்துக்கேயர்கள், 1619-ம் ஆண்டு இலங்கைத் தமிழகத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றி ஆட்சிபுரிந்திருக்கின்றனர்!

இவர்களின் காலத்திற்குப்பின்னர், இந்தியாவையும், இலங்கையையும் அடிமைப் படுத்தி அரசாட்சி செலுத்திவந்த ஆங்கிலேயருடன், அஹிம்சையை ஆயுதமாகவும், அன்பைக் கேடயமாகவும் கொண்டு கத்தியின்றி, இரத்தமின்றி 'கடும்போர்'செய்து வெற்றியீட்டினார் காந்தி மகாத்மா. ஆங்கிலேயரும்தங்கள் மூட்டை முடிச்சுகளுடன் தங்கள் சொந்த நாட்டுக்குப் போய்விட்டார்கள்!

ஆனால் —

போர்த்துக் கேயர்கள் மட்டும் கோவாவை 'உடும்புப்பிடி' யாகப் பிடித்துக்கொண்டு அசைய மறுத்தார்கள். அதன்பலன் காந்தியின்வாரிசான நேருஜியினால் அடித்துக்கலைக்கப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது! நியாயத்தைஉணர்ந்து'நல்லதனமாக' அவர்களே தங்கள் சொந்த நாடுக்குத் திரும்பிப் போயிருக்கலாம்!

''நன்றி மறப்பது நன்றன்று'' என்று சொல்லுவார்கள். பிற்காலத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறுமாறு பாரதசர்க்கார் கேட்டுக்கொண்ட பிறகு, 'முடியாது'என்று முரண்டு பண்ணி, சிறு சிறு 'சில்லறை' விஷயங்களில் ஈடுபட்டதைத்தவிர, முற்காலத்தில் இந்தியாவின் முன்னேற்றத்திற்காகப் போர்துக்கேயர் செய்த தொண்டுகள் பலவுண்டு என்பது மறுக்கவோ, மறைக்கவோ மறக்கவோ முடியாத உண்மை!

அக்காலத்தில் தமிழ்நாட்டில் ஜாதிக்கொடுமையால் பாதிக்கப் பட்டுத் தவித்தவர்கள் ஏராளம்! அவர்களில் நெய்தல் நிலத் தமிழ் மக்களே கணக்கற்றோர்!

1542-ம் ஆண்டு, மே மாதம் 6-ம் திகதியன்று போர்த்துக்கேய மதபோதகரான அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் (St. Francis xavier) தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் மதபோதகம் செய்துவந்தார். ''கஷ்டப் படுகிறவர்களே என்னிடம் வாருங்கள்" என்று மொழிந்த ஏசுவின்மதத்தைப் போதித்துவந்த அர்ச். சவேரியாரை, ஜாதிக்கொடுமையால் பாதிக்கப்பட்டு, இன்னல்கள் பல அனுபவித்து வந்த நெய்தல் நிலத்தமிழ் மக்கள் பின்பற்றினர். தங்கள் பூர்வ மதமான இந்து மதத்தை விட்டு, கிறிஸ்து மதத்தைப் பின்பற்றினர்.

காரணம்?—

அக்காலத்தில் இந்துமதத்தின் 'உயர்குலத் தோன்றல்' கள், 'ஜாதி' என்ற பெயரால் அவர்களுக்குப் புரிந்த அநீதிதான்! 'ஜாதிப்பேய்' இதனால் ஓரளவு ஒழிந்தது!

பிற்காலத்தில் நம் மக்களின் கல்வி முன்னேற்றம் கருதி, போர்த்துக்கேயர் இந்தியாவிலும், இலங்கையிலும் கட்டுவித்த கல்விக்கூடங்கள் கணக்கற்றவை, அவர்களின் சேவையினால் கல்விகற்று, இன்று புகழுடன் திகழும் நம்நாட்டு நல்லறிஞர் ஏராளம்!

போர்த்துக்கேயர் தமிழகத்தின் விலைமதிப்பற்ற முத்தின்மேல் மோகம் கொண்டு, முதன்முதலில் பாரதநாட்டில் புகுந்தார்களென்றால், அவர்கள் வருகைக்கு மூத்தெடுத்த நம் தமிழர்கள்தானே மூல காரணம்?

கடந்த 17—12—1961 போர்த்துக்கேயர் கோவாவில் செலுத்திவந்த ஆதிக்கத்திற்கு முடிவு நாள்! இன்று இந்தியாவைவிட்டு அவர்கள் போன பிறகு, அவர்கள்நமக்குச் செய்து விட்டுச் சென்ற சேவையைப்பற்றியும் சற்று நினைவு கூரவேண்டியது நமது பண்பாடல்லவா?

— ஜோ. ஏ. எம். தாஸ்.

### போனவள்! 1961

தொலைந்தாயோ
அறுபத்தியொன்றே
தொலைத்துபோ
திரும்பாதே—நீ
தந்திட்ட தொல்லைகள்
கொஞ்சமோ?
○ மொழிக்குழப்பம்!
○ இனக்குழப்பம்!
○ அதிகவரி!
○ அடக்குமுறை!
○ அவசரகாலம்!
இம்மட்டோ
இன்னும்,
பெற்றுவிட்டே
போகின்றாய்;
○ வேலை—
நிறுத்தம்!
○ வேலை—
நிறுத்தம்!
○ வேலை —
நிறுத்தம்!

### வந்தவள்! 1962

ஓ, வந்தாயா
அறுபத்திரண்டே!
நீ,
வரும்போதே
கேடுகெட்டு
வருகின்றாய்!
உன் முந்தையவள்
விட்டுவைத்த
மோசமெல்லாம்
நீ
தாங்குவையோ?
அல்லாது—
அவளுக்கும் மேலாக
ஆடுவையோ!
எட்டுக் கிரகங்கள்
ஒன்றாகச் சேர்ந்து—
ஏ, பாவி!
உன் தலையில்
வீழாதோ!
அதன்பிறகு
புதுயுகமும்
வாராதோ!

# குப்பை கூடைக்குள் நடிகை ராகினி!

## பம்பாய் நகரில் நடைபெற்ற சம்பவம்!

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வளர்ச்சி நிதிக்காக இலங்கையில் இராமாயண நாட்டிய நாடகத்தை ஆடிக் காட்டுவதற்தென, பிரபல தென்னிந்திய நாட்டிய நடிகை ராகினி கடந்த அக்டோபர் மாதம் தமது குழுவினருடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இலங்கையில் தமது நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துக்கொண்டு, பம்பாய் திரும்பிய நடிகை ராகினிக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அவர் புதிதாக வாங்கியிருந்த விடுதியின் வெளிவாசல்சாவி, விடுதிக்குள்ளேயே வைத்துப் பூட்டப்பட்டிருந்தது. ராகினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சற்று நேரம் யோசித்தார். வேறுவழியின்றி. சுவற்றில் இணைக்கப்பட்டிருந்த குழாயின் மூலம், திறந்திருந்த குளிக்கும் அறை ஜன்னல் கதவின் வழியாக உள்ளே குதித்தார். அவர் குதித்த இடம் எது தெரியுமா? குப்பைக் கூடை!

எப்படியோ சமாளித்துக்கொண்டு தேடிப்பார்த்தபோது, ஒருவழியாக வாசற் கதவுச் சாவியும் அகப்பட்டது. ஆனால், அவர் பத்திரிகை நிருபர் பேட்டிக்கு உடுத்துக்கொண்டு போவதற்காக வைத்திருந்த புடைவைகள் அடங்கிய பெட்டியைக் காணவில்லை! இலங்கைக்கு நாட்டியமாடுவதற்காக அவருடன் கொண்டுவந்திருந்த உடுப்புகள்தான் அப்பொழுது கைவசம் இருந்தன. அதில் ஒன்றை எடுத்து உடுத்துக்கொண்டு, பத்திரிகை நிருபர் பேட்டிக்கு வந்தார்.

அது ஒரு ஜரிகைச் சேலை. பளபளவென்று ஜரிகை மின்ன வந்து உட்கார்ந்த ராகினி, "நான் இப்படிக் கல்யாணப் பெண்மாதிரி அலங்காரம் செய்துகொண்டு வந்து உட்கார்ந்துகொண்டிருப்பதற்கு இதுதான் காரணம்!" என்று மேற்சொன்ன கதையைச் சொல்லிச் சிரித்தார்!



எந்த ராஜ்யத்தைக் கட்டி ஆளும் அரசி இவர் என்று யோசிக்கிறீர்களா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, சொர்க்கா புரொடக்ஷன்ஸாரின் 'தெய்வ வாக்கு' என்ற படத்தில் தோன்றும் லட்சுமி ராஜ்யம் தான் இவர்!

## ?

திரைப்பட நடிகரான எஸ். ஜி. ஈஸ்வரன், புதுமையான நாடகம்ஒன்றை சென்னை நகரில் அரங்கேற்றவிருக்கிறார். அந்நாடகத்திற்கு அவர் 'கேள்விக்குறி' என்று நாமகரணம் சூட்டியுள்ளார்!

இந்த நாடகத்தில் உள்ள 'புரட்சி' என்ன வென்றால், இதில் கதாநாயகி இல்லை! பாடல்களும் கிடையாது!!

புதுமை விரும்பி, அரசியல்வாதி, மதகுரு, வியாபாரி, ரேஸ் பைத்தியம், சினிமா நடிகன் ஆகியோரைப் பின்னணியாகக் கொண்டே இந்தக் கதை அமைக்கப்பட்டுள்ளது!

## வீரப்பாவின் அடுத்த படம்?

பிரபல வில்லன் நடிகரான திரு. பி. எஸ். வீரப்பா தனது அடுத்த படத்தைத் தொடங்குவதற்கான வேலைகளைத் துரிதமாகசெய்துவருகிறார்கள். திரு. ரா, வெங்கடாசலம் இப்படத்திற்கான கதை வசனத்தை எழுதுகிறார். இதில் சிவாஜிகணேசனும், சரோஜாதேவியும் நடிக்கவிருக்கின்றனராம்;

## 'நல்லவர்கலுக்கு நந்த்ரி!'

அண்மையில் சென்னையில் இரண்டாவது சர்வதேசத் திரைப்பட விழா நடைபெற்றபோது, தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் சார்பில் நடைபெற்ற விருந்தில், பல அயல் நாட்டுப் பிரமுகர்களும், கலைஞர்களும் கலந்துகொண்டார்கள்.

வெளிநாட்டுக் கலைஞர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தங்கள் சொந்தத் தாய் மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ நன்றி தெரிவித்துப்பேசினார்கள்.

இந்த விழாவில் கலந்துகொண்ட போலந்து நாட்டுப் பிரதிநிதியும் அவரது தாய் மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ பேசுவார் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் 'மைக்' முன் வந்து நின்றுகொண்டு; "நீங்கல் நல்லவர்கல். உங்கலுக்கு நந்த்ரி. நல்லவர்கலுக்கு நந்த்ரி" என்று 'தமி'ழிலேயே பேசி, சபையோரைப் பிரமிப்பில் ஆழ்த்திவிட்டார்!

## நர்கீஸின் முதற் பெயர்?

சில நடிகைகள் படத்தில் நடிக்க ஆரம்பித்தவுடன் தங்கள் தாய்தந்தையர் இளமையில் அவர்களுக்குச் சூட்டிய பெயரை மாற்றிக்கொண்டு விடுகிறார்கள் என்ற விஷயம் வாசகர்களுக்குத் தெரியாமல் இருக்கமுடியாது!

உதாரணமாக, மாதுரிதேவிக்கு அவர்கள் பெற்றோர் இட்டபெயர் கிளாரா என்பதும், அவர் ஒரு கிறிஸ்தவப் பெண் என்பதும் பலருக்குத் தெரிந்திருக்கக் கூடும். அதேபோல் பிரபல ஹிந்தி நடிகையான நர்க்கீஸின் மதம் என்னவென்றும்; பெற்றோர் அவருக்குச்சூட்டிய பெயர் என்னவென்றும் உங்களுக்குத் தெரியுமா?

அவர் ஒரு இஸ்லாமியப் பெண்மணி! முதலில் அவருக்குப் பெற்றோர் இட்டபெயர், கனீஸ் பாத்திமா என்பது. அவர் சினிமாவில் நடிக்க ஆரம்பித்த பிறகுதான், தன் பெயரை 'நர்கீஸ்' என்று வைத்துக்கொண்டார்!

## பிரபல பாடலாசிரியர் கண்ணதாசன்!

'பாசமலர்' படத்தின் வெள்ளிவிழா, பிலிம்வர்த்தக சபையில் நடைபெற்றது. விழாவில்கலந்துகொண்டு பரிசுபெற்ற பிரபல பாடலாசிரியர் கண்ணதாசனையும் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் பேசியபோது ஒரு நிகழ்ச்சியைப்பற்றியும் குறிப்பிட்டார்.

"மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளரான திரு டி. ஆர். சுந்தரம் அவர்கள்தான் என் முதலாளி. பாட்டுப் பாடுவதென்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஆனால் பாட்டுப்பாடுவதற்கு ஒரு சந்தர்ப்பமுமே கிடைக்கவில்லை!

ஒருநாள், நான் ஸ்டுடியோவின் ஸ்டேஜ் ஒன்றில் வாய்விட்டுப் பாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கே புரடக்ஷன் மேனேஜராக எம். ஏ. வி. பிக்சர்ஸ் உரிமையாளர் திரு. எம். ஏ. வேணு பணியாற்றிக்கொண்டிருந்தார். ஸ்டுடியோ அதிபர் டி. ஆர். சுந்தரம் அழைப்பதாக உள்ளே சென்ற அவர், உடனே என்னிடம் வந்து "நீ பாட்டு ஒன்றும் பாட வேண்டாமாம். பாட்டு எழுதினால் மட்டும் போதுமாம். டி. ஆர். எஸ். இதை உன்னிடம் சொல்லச்சொன்னார்" என்றார்.

அன்றுதான் பாட்டுப் பாடுவதை விட, பாட்டு எழுத எனக்கு நன்றாக வரும் என்பதைக் கண்டுகொண்டேன். அதற்குப் பிறகுதான் பாடும் ஆசையை விட்டுவிட்டுப் பாட்டெழுதத் தொடங்கினேன்" என்றார் திரு. கண்ணதாசன்.

## தமிழ் — தெலுங்கு பங்காளிகள்!

ஐரிஷ் மூவிஸாரின் 'பங்காளிகள்" படப்பிடிப்பு யாவும் முடிவடைந்துவிட்டன. இப்படத்தில்ஜெமினி கணேசனும், ஈ. வி. சரோஜாவும் இணையாக நடிக்கின்றனர். அஞ்சலிதேவி, எம். ஆர். ராதா, தேவிகா டி. எஸ். துரைராஜ், எஸ், வி. ரங்கராவ், முத்தையா, பி. எஸ். ஞானம் ஆகியோரும் இப்படத்தில் நடித்துள்ளனர்.

'பங்காளிகள்' தமிழ்ப் படத்தை வெற்றிகரமாகத் தயாரித்து முடித்த ஐரிஷ்மூவீஸார், இப்பொழுது அதே படத்தைத் தெலுங்கில் "பாகஸ்தலு" என்ற பெயரில் தாயரித்து வருகின்றனர்.



என் நெஞ்சில் போதி மாதவனை வைத்துப் பூஜிப்பதற்கும்; உலகை வெறுத்த என் கண்களில் கண்ணீர் வடிவதற்கும் காரணம் என்ன தெரியுமா தம்பி?...... அதுதான், இருபது ஆண்டுகளுக்கு முன் நான் செய்த

# தவறு!

— சுதர்ஷன் —

கடுகண்ணாவை புகையிரத நிலையத்திற்கு வந்ததும் ரயில் 'ஊ...' என்று ஓலமிட்டவண்ணம் மெதுவாக நின்றது. மஞ்சள் உடையணிந்த ஒரு புத்தமத சுவாமியார் நான் இருந்த பெட்டியில் ஏறி, என் எதிரேயிருந்த ஆசனத்தில் அமர்ந்தார் எதிரும் புதிருமாக இருந்தோம். எங்களுக்குப் பக்கத்தில் வேறுயாருமில்லை. ரயில் புறப்பட்டது. சுவாமியார் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. என்முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்கவில்லை தன் கையில் வைத்திருந்த ஒரு பெரியபுத்தகத்தைத் திறந்து வைத்துக்கொண்டு, தன் கவனத்தை அதில் பதியவைத்துக்கொண்டிருந்தார்.

அந்தப் புத்தகம் —

ஆங்கிலப்புத்தகமோ, சிங்களப் புத்தகமோ அல்லது ஒரு தமிழ்ப் புத்தகமோ அல்ல. ஏதோ ஒரு வேற்றுமொழிப் புத்தகமாகத் தெரிந்தது. அதில் பிரசுரிக்கப் பட்டிருந்த படங்களைப்பார்த்த நான், அது ஒரு பர்மிய மொழிப் புத்தகமாக இருக்கக்கூடும் என்று யூகித்துக்கொண்டேன்.

கடுகண்ணாவையைத் தாண்டிக் காட்டுப்பாதையை ஊடுருவிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது ரயில். சுவாமியார் தன்கையில் வைத்திருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு, வெளியே மிகவும் கூர்மையாக உற்றுநோக்கிக் கொண்டிருந்தார் அவர்கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது!

பார்ப்பதற்கு நல்ல ஆஜானுபாகுவான தோற்றம். அவர் கையில் வைத்திருந்தது பர்மிய மொழிப் புத்தகம். ஆனால் அவரைப்பார்க்கும் பொழுது ஒரு பர்மியரைப்போல் தோன்றவில்லை! அவர் ஏன் இந்த இடத்திற்கு வந்ததும் கண்ணீர் விடவேண்டும்? அவர் செய்கையை அவதானித்த எனக்குப்பெரும் புதிராக இருந்தது.

"சுவாமி!..... தயவு செய்து இந்தப்புத்தகத்தை நான் பார்க்கலாமா?..." என்று ஆங்கிலத்தில் மெல்லப் பேச்சை ஆரம்பித்தேன்.

"தாராளமாகப் பாருங்கள். இதோ...ஆனால், உங்களுக்கு இந்தபர்மியபாஷை விளங்காது என்று நினைக்கின்றேன் .." என்று அழகான தமிழில்பேசி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டார் அவர்.

"உங்களுக்குத் தமிழ்மொழியும் தெரியுமா?" என்றேன் நான்.

"ஆமாம் தெரியும். நான் முதன்முதலில் இந்த உலகில் தோன்றிய பொழுதே தெரிந்து கொண்ட மொழி அதுதான்!"

"அப்படியானால் நீங்கள் ஒரு தமிழரா?"

'ஆமாம்' என்று சொல்வதைப்போல் தன் தலையை மேலும் கீழுமாக அசைத்தார் அவர்.

"சுவாமி..." என்று சற்றுத்தயங்கினேன் நான்.

"ஏன் தயங்குகிறீர்கள்? கேளுங்கள்" என்றார் அவர்.

"ஒரு விஷயத்தைத் தங்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன். தவறாக இருந்தால் என்னை மன்னிக்கவேண்டும். சற்று நேரத்திற்கு முன் நீங்கள் ஏன் அழுதீர்கள்?..." என்று தயங்கித் தயங்கி என் மனதில் நான் அடக்கிவைத்திருந்த கேள்வியை அவரிடம் கேட்டுவிட்டேன்.

"தவறு செய்யாத மனிதன் இந்தஉலகில் இல்லை தம்பி... இருபது ஆண்டுகளுக்குமுன் நான் இதே இடத்தில் செய்த ஒரு 'தவறு' தான் என்னை இன்று அழவைத்தது!...நான் இன்று என் நெஞ்சில் போதி மாதவனைவைத்துப் பூஜிப்பதற்கே அந்தத்தவறுதான் காரணம்!" என்றார் அவர்.

"என்ன?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன் நான். அவர் தொடர்ந்தார்—

"தம்பி. உம்மைப்போல் நானும் ஒரு தமிழன்தான். எனது சொந்த ஊர் யாழ்ப்பாணம். இருபது ஆண்டுகளுக்கு முன் என் தந்தை கொழும்பில் ஒரு பிரபல டாக்டர். நான் கண்டியிலுள்ள ஒரு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு வயது இருபத்திரண்டு.

ஒரு நாள் —

எனது கல்லூரி விடுமுறையைக் கொழும்பில் கழித்துவிட்டு, கண்டியை நோக்கி ரயிலில்போய்க்கொண்டிருந்தேன். நான் இருந்த பெட்டியில் ஒருவருமே இல்லை. ரயில் கடுகண்ணாவையை அடைந்ததும் ஒரு சிங்களப்பெண் நான் இருந்த பெட்டியில் ஏறி, ஆசனத்தின் ஒரு மூலையில் அமர்ந்தாள். நல்ல வாளிப்பான உடற்கட்டு. அழகிய இளம் பெண் அவள். ஏழ்மையின் கோலத்தை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது அவள் அணிந்திருந்த கந்தல் உடை. 'ஆயா'வாக இருக்கவேண்டுமென்று நான் யூகித்துக்கொண்டேன். சற்றுநேரம் எங்களிடையே மௌனம் நிலவியது. "எங்கே போகிறாய்?" என்று சிங்களத்தில் அவளுடன் மெல்லப் பேச்சுக்கொடுத்தேன். அவள் பதில் ஒன்றும் பேசாமல் ஒரு புன்முறுவலைமட்டும் சிந்திவிட்டு, வேறுபக்கமாகப் பார்வையைச் செலுத்தினாள்.

அவள் கட்டுடலும், காந்தக் கண்களும் என்னை என்னவோ செய்தன. அவள் அழகையே இமைக்காமல் ரசித்துக்கொண்டிருந்தேன்.

சற்றுநேரத்தில் —

கண்ணயர்ந்த அவள், ஆசனத்தின் பின்னால் சாய்ந்துகொண்டாள். நித்திரையிலும் கூட அவள் எத்தனை அழகாகத் தோற்றமளிக்கிறாள்?

என்னுள்ளே புகைந்துகொண்டிருந்த என் உடலுணர்வு என்னைத் தட்டியெழுப்பியது. அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு என் இடத்தை விட்டு மெல்ல எழுந்து, அவள் அருகில் சென்றேன்.

ரயில் வேகமாக ஓடிக்கொண்டேயிருந்தது! அந்த ஆட்டத்தில் சற்றுத்தள்ளாடிவிட்டேன். என் கால் அவள் மேல் பட்டுவிட்டது. திடுக்கிட்டு விழித்துக்கொண்ட அவள் மிரளமிரள விழித்தாள், அந்த மிரளும் விழிகளில் கூடத்தான் எத்தனை கவர்ச்சி!

மறுகணம் —

அவள் கைகளை மெல்லப்பற்றினேன். அவள் திமிறினாள். நான் விடவில்லை. அவள் கைகள் இரண்டையும் பின்புறமாக அணைத்துப் பிடித்துக்கொண்டேன். அவள் என்னுடன் போராடினாள். ஆனால் என் முரட்டுப் பிடியிலிருந்து அவளால் விடுபடமுடியவில்லை கடைசியில் எப்படியோ தன் பலத்தையெல்லாம்ஒன்று கூட்டி என் பிடியிலிருந்து விடுபட்ட அவள், ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்துகீழே குதித்துவிட முயற்சித்தாள். நான் விடவில்லை. அவள் வாசலுக்குப் போக முடியாதவண்ணம் வழியைமறித்துக்கொண்டேன் இத்தனை கலவரத்தின் ஊடேயும் அவள் ஏன் கூச்சலிடவில்லை?

எதிரே எமனைப்போல் நின்றுகொண்டிருந்த என்னைப் பரிதாபமாகப் பார்த்தாள் அவள். அப்பொழுதுதான் அவளை நான் நன்றாகக் கவனித்தேன்.

அவள்.. ஐயோ, பரிதாபம்! ...அவள் ஒரு ஊமை!

சீ!...... ... எத்தனை பெரிய கொடுமையைச் செய்ய விருந்தேன்! ஒரு கணத்தில்—ஒரே ஒரு கணப்பொழுதில், என் மனச்சாட்சி என்னைக் கொன்றது.

அடுத்த ஸ்டேஷனில் ரயிலும் நின்றது. ரயிலிலிருந்து இறங்கிய நான் என் கால்போன போக்கெல்லாம் நடந்தேன். மூன்று மாதங்களாக இந்த இலங்கையைச் சுற்றியே பித்துப்பிடித்தவன்போல் அலைந்து திரிந்தேன். இலங்கையின் சூழ்நிலை, நான்விரும்பிய 'பிற்கால வாழ்க்கைக்கு' ஏற்றது அல்ல என்பதை உணர்ந்த நான், பர்மாவுக்குப் புறப்பட்டேன். அங்கு பர்மிய மொழி பயின்று, பர்மிய மக்களுக்குப் புனிதன் புத்தனின் பரிசுத்த கொள்கையை உபதேசித்து வருகிறேன். அன்று நான் ரயிலில் செய்த அந்தத் தவறுதான், என் உற்றார், சுற்றத்தார், ஊர், உலகம் யாவற்றையுமே விட்டு, தனி மனிதனாக—துறவியாக ஆக்கியது!

அந்தச் சம்பவம் நடந்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் மீண்டும் இலங்கைக்கு வந்திருக்கிறேன். அன்று கல்வி கற்பதற்காகக் கண்டிக்குச் சென்றேன். இன்று புத்தபெருமானின் புனிதச் சின்னம் இருக்கும் தலதா மாளிகையைக் கண்டுகளிப்பதற்காகப் போய்க்கொண்டிருக்கிறேன்." என்றார் சுவாமியார்.

* * *

திடுக்கிட்டு விழித்துக்கொண்டநான், எழுந்திருந்து வெளியில் நோக்கினேன். கண்டி நகரை வந்து அடைந்து விட்டது ரயில். சற்றுத் தூரத்தில் நடந்துபோய்க் கொண்டிருந்தார் அந்தப் புத்தசுவாமியார்!

'கரேல் செஸ்மன் கதை' 'ரமணன்'

# தூக்குமேடைக் காலனுக்கு 'டிமிக்கி' கொடுத்தான்!

நீதிபதிதீர்ப்புக்கூறினுர்- "'சி சி' என்ற பெயரிலும்; கரேல் செஸ்மன் என்ற பெயரிலும் பல கொள்ளேகள், கொலேகள், கற்பளித்தல் போன்ற பெருங்குற்றங்கள் புரிந்த இவனுக்கு, லோஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றம், ஜூரர்களின் ஏகோபித்த தீர்ப்பின்படி தூக்குத்தண்டனே விதிக்கிறது!"

செஸ்மனுக்கு முதன் முறையாக அளிக்கப்பட்ட தீர்ப்பில், 1948-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ந் திகதியன்று மரணதண்டனே நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பெரிய விஷயத்தைப் பத்திரிகை நிருபர்கள் சும்மா விட்டுவைப்பார்களா? உலகின் பலபாகங்களிலுமுள்ள பத்திரிகை நிருபர் பட்டாளமே செஸ்மனேநோக்கிப் படையெடுத்தது! பத்திரிகை நிருபர்கள் பேட்டியில் செஸ்மன் கூறிய பதில் இதுதான்:

"சமூகம்தான் என்னேத் திருடனுக்கியது. என் அன்னே என்று இறந்தாளோ, அன்றே என் நல்ல குணங்களும் இறந்துவிட்டன. வேண்டுமென்றே நான் கொலே கொள்ளேகளேச் செய்யவில்லே, என் தாயின் மேலிருந்த அன்புதான் என்னேக் கொலேகாரனுக மாற்றியது. எனக்கு மற்ருெருமுறை சந்தர்ப்பமளித்தால், நான் நல்லவனுக வாழ்வேன்"

அரசாங்கம்செஸ்மனின் எந்தவித வேண்டுகோளுக்கும் செவி சாய்க்கவே இல்லே. அதன் பயனுக செஸ்மன் அப்பீல் எடுக்க வேண்டியதாயிற்று. அப்பீல் என்ருல் சும்மாவா? அதற்குப் பணம் வேண்டுமே?

'ஊருத கடலேயும் தொடர்ந்து இறைத்தால் வற்றித்தான் போய்விடும்' என்று ஆங்கிலப் பழமொழி ஒன்று உண்டு. செஸ்மனும் இன்று அதே நிலேயில்தான் இருந்தான். எடுக்க எடுக்கப் பணம் விளேயவா செய்யும்? அப்பீல் எடுப்பதென்ருலும், இப்பொழுது செஸ்மனின் கையிருப்பு மிகவும் சொற்பம்!

அரசாங்கத்தினர், செஸ்மன் அப்பீல் எடுப்பதற்கு முதலில் அனுமதிதர மறுத்துவிட்டனர். அவனது வழக்கறிஞர் எவ்வளவோ வாதாடியதன்பேரில் அவனுக்குஅப்பீல்கிடைத்தது.

1948-ம் ஆண்டு, நவம்பர் மாதம் 12-ம் திகதியன்று அவனது உயிரைக் கொண்டு போகவிருந்த காலனுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டான் செஸ்மன்!

அப்பீல் எடுத்தபிறகாவது தனக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறப்படும் என்றுதான் செஸ்மன்எண்ணினுன். ஆனுல், நீதிஸ்தலம் அவனுக்குஎந்தவிதகருணேயும் காட்டவில்லே. மீண்டும் செஸ்மனுக்கு மரதண்டனேயேவிதிக்கப்பட்டது!

1949-ம்ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதியன்று காலே 10-30 மணிக்கு செஸ்மனேத் தூக்கிலிடவேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

ஏறக்குறைய ஒருவருட காலத்தை, செஸ்மன் சிறையிலே கழித்துவிட்டான். ஒருவருட காலத்தையும், ஒருவேலேயும் செய்யாமல் சும்மா கழிக்கமுடியுமா? ஒரே ஒரு நாளே எங்கேயாவது தனிமையில் கழிக்கவேண்டுமென்ருல், நமக்கு 'போர்' அடிக்கிறதே!

அந்த ஒரு வருட இடைக்காலத்தில்தான் செஸ்மனுக்குப் புத்தகம் எழுதவேண்டுமென்ற ஆவல் உதித்தது. ஆவ்லோடு நின்றுவிடவில்லே, செயலிலும் காட்டத் தலேப்பட்டான். மூன்று மாதத்தில் அவனுல் ஒரு புத்தகத்தின் முதல்மூன்று அத்தியாயங்களேத்தான் எழுத முடிந்ததாம். ஏனென்ருல், தான் எழுதியகையெழுத்துப்பிரதியை ஒரு முறை படித்துப்பார்த்துவிட்டு, திருப்தியளிக்காமற் போகவே, அதைக் கிழித்துவிடுவானும்! இருந்தாலும் புத்தகம் எழுதவேண்டும் என்ற ஆவல் அவனுள் வலுத்துக் கொண்டேயிருந்தது! அத்தோடு, சட்டப் புத்தகங்களேயும் அவன்படிக்கத் தொடங்கினுன் நாளடைவில், சட்டப்புத்தகங்களே அவன் கற்றதின் மூலம் அவனுக்கு நல்ல வாதத் திறமைகிடைத்தது!

இதற்கிடையில், செஸ்மன் தனக்கு அளிக்கப்பட்டதீர்ப்பு அநீதியானதென்றும், தயவு செய்து மீண்டும் ஒருமுறை ஆரம்பத்திலிருந்து வழக்கை நடாத்தவேண்டுமென்றும் நீதிஸ்தலத்திற்கு ஒருவேண்டுகோள் விடுத்தான். ஆனுல், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்! செஸ்மன் அதற்காக அத்துடன் நின்றுவிடவில்லே. உடனடியாகக் கலிபோர்ணியாவிலுள்ள கவர்ணருக்குத் தன்வரலாற்றை விளக்கி நீண்டதொரு உருக்கமான கடிதம் எழுதினுன். அதில், நீதிஸ்தலம் தனக்கு அநீதியானதீர்ப்பு வழங்கிவிட்டதென்றும், நீதி வழங்கியவர்கள், ஓரவஞ்சமாக நடந்து கொண்டார்கள் என்றும், தயவுகூர்ந்து தனது வழக்கை மீண்டும் ஒரு முறை ஆரம்பத்திலிருந்து விசாரிக்குமாறும் அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தான்.

கலிபோர்ணிய கவர்ணர் திரு. எட்மண்ட் பிரவுன், செஸ்மனின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தாரா? -

(அடுத்தஇதழில் முடியும்.)




உங்கள் அபிமானத்துக்குரிய
'மில்க்வைற் சோப்'
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்
நவீன தயாரிப்பாக
உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!

# இவரே எங்கள் (வேம்படி மகளிர் கல்லூரி) அதிபர்!

"பாடசாலே அதிபரென்ருல் மாணவ, மாணவிகள் அவர் பக்கத்தில் போக அஞ்சுவார்கள்!' என்று என் போன்ற மாணவிகள் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வேம்படி மகளிர் உயர்தரப் பள்ளியில்சேர்ந்து கல்விகற்கும் பாக்கியம் எனக்குக் கிடைப்பதற்கு முன்னர், நான் கல்வி கற்ற கல்விக் கூடங்களில் நானும் அதை அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். ஆனுல் அந்த அதிபர்களுக்கு விதிவிலக்குத்தான் எங்கள் வேம்படி மகளிர் பள்ளி அதிபர் செல்வி தம்பையா அவர்கள்.

மாணவிகளிடத்தில் அன்னேயைப்போல் அன்பைச் சொரிந்து, ஆசிரியையாகப் பாடங்களேப் போதித்து, தோழியாகவும், சகோதரியாகவும் எம்முடன்பழகி, அதே சமயத்தில் கட்டுப்பாடு நிறைந்த ஒரு அதிபராகவும் திகழ்கிருர் செல்வி தம்பையா அவர்கள்.

எங்கள் அதிபர் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்று திரும்பியிருக்கிருர். எனினும், எந்தவிதமேனுட்டு நாகரிகமும் அவரைப் பற்றிக்கொண்டதில்லே.

உயர்தரக் கல்விபெற்று யாழ்ப்பாணத்தில் இன்று புகழுடன் இலங்கும் ஒரு மகளிர் பாடசாலேயின் அதிபராக விளங்கும் எங்கள் அதிபரின் சேவையே, எங்கள் பாடசாலேயின் புகழுக்குக் காரணம் என்று கூறினுல் மிகையாகாது.

சற்றும் கர்வமற்ற இனிய சுபாவம், எல்லோரிடமும் பாகுபாடின்றி அன்பொழுகப்பேசும் ஆற்றல், எளிய-சுத்தமான ஆடை, அறிவொளி பரப்பும் கண்கள் இத்தகைய சிறப்பியல்புகளேப் பெற்றவர்தான் எங்கள் அதிபர். ஓர் அன்னேயின் பரிவுடன் குற்றம் கண்டவிடத்தில் எங்களேக் கண்டித்துத் திருத்துவார். வகுப்பில் எட்டிக் காயாகக் கசக்கும் ஆங்கிலப் பாடத்தைக்கூட நாங்கள் விரும்பிப் படிக்கும் விதத்தில் எங்களுக்கு விளக்குவார். எப்பொழுதும் 'உம்மணுமூஞ்சி'யாக இருக்காமல், கலகலப்பாகச் சிரித்துப்பேசியே பாடங்களேப் போதிப்பார்.

எங்கள் அதிபர் செல்வி தம்பையா தமிழ்ப்பற்று மிக்கவர். (மறந்தும் கூட அயல்மொழியைக் கலக்காமல்) எப்பொழுதும் சுத்தத்தமிழிலேயேபேசுவார். அவரது தமிழ்ப் பேச்சைக் கேட்கும் எங்களுக்கும்இதனுல் தமிழ்ப்பற்று ஏற்படுவது இயற்கையேயல்லவா?

ஆனுல், ஒரே ஒரு விஷயம். எங்கள் அதிபருக்குச் சில சமயங்களில் கோபம் வந்து விட்டாலோ...(அப்பப்பா, அதை நினேக்கவே பயமாக இருக்கிறது!)

'கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகிவிடாது' அல்லவா? அவர் கடமையை அவர்செய்கிருர், அதை உணர்ந்து, எங்கள் தவறுகளேத் திருத்திக் கொள்ள வேண்டியது எங்கள் கடமையல்லவா?

வேறு பாடசாலேகளில் கல்வி கற்கும் என்போன்றபல மாணவிகள், தங்கள் தங்கள் அதிபர்களேப்பற்றி உயர்வாக எண்ணுவது இயற்கை. எனக்குத் தெரிந்தவரை செல்வி தம்பையா, 'அதிபர்' என்ற சொல்லுக்கு ஒரு இலக்கணமாகவே விளங்குகிருர் என்பது உண்மை!

— செல்வி, செல்வகுமாரி
செல்லத்துரை.
யாழ்ப்பாணம்.

## உங்கள் கருத்து என்ன?

கடந்த வாரம் புதினத்தில் "காதல் முறிந்தால் துறவா?" என்ற தலேயங்கத்துடன், ஒரு உண்மைச் சம்பவத்தைப் பிரசுரித்து, அதைப்பற்றி வாசகர் கருத்தைக் கேட்டிருந்தோம். அந்த விஷயத்தை ஆதரித்தும், எதிர்த்தும் தங்கள் கருத்தைத் தெரிவித்துக் கணக்கற்ற வாசகர்கள் எழுதியிருக்கின்றனர். அவைகளில் சிலவற்றை அடுத்தவாரம் புதினத்தில் காணலாம்!

Registered as a news paper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு

உருவாகும் சூழ்நிலையில்: இடதுசாரி

# ஐக்கிய முன்னணி!

• இடதுசாரிக் கட்சிகளுக்குள்ளேயே ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. உத்தியோகப்பற்றற்ற முறையில் அப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தவுடனேயே மொழிப்பிரச்சினையும், பிரஜாவுரிமைப் பிரச்சினையும் எழுந்தனவாம், இந்த இரு விஷயங்களும் தற்போதைக்கு பின்னணிக்குத் தள்ளப்பட வேண்டுமென்றும், பதவியைக் கைப்பற்றிய பின்பு அவைகளைத் தகுந்தமுறையில் தீர்த்துவைக்கலாமென்றும்எல்லாப்பகுதிகளும் கருதுகின்றனராம்.

'சிங்களம் மட்டும்' சட்டத்தை அமுல் செய்ய வேண்டும் என்று தமது கொள்கையை வற்புறுத்தாமல்தான் விடுவதாயும் சமாசமாஜக் கட்சியினரும் தங்களின் கருத்துக்களைத் தற்போதைக்கு வெளியே கூறக்கூடாது என்றும், பொருளாதாரப்பிரச்சினையையே இப்பொழுது முன்வைத்துப் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் திரு. பிலிப் குணவர்தன கூறினாராம்! சமசமாஜக்கட்சித் தலைவர்களும் அக்கருத்தை ஆதரிக்கின்றார்களாம்.

சாமசமாஜக் கட்சியும், மக்கள்ஐக்கிய முன்னணியும், கம்யூனிஸ்ட்கட்சியும் ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த பட்ச வேலைத் திட்டத்தைத் தயார் செய்வதில்தான் தலைவர்கள் இப்பொழுது ஈடுபட்டுள்ளார்களாம்.

ஆசிரியகலாசாலையிலிருந்து வெளிவந்த

# ஆசிரியரின் இடமாற்ற உத்தரவின் மர்மம்!

## 'புதினம்' நிருபர் அம்பலப்படுத்துகிறார்!

வடபகுதிக் கல்வி இலாகாவைப் பற்றி இன்னொரு செய்தியும் கிடைத்திருக்கிறது.யாழ்ப்பாணப்பகுதிஆசிரியகலாசாலைகளிலிருந்து இவ்வாண்டு வெளியான ஆசிரியர்களுக்கு 'யாழ்ப்பாணத்துக்கு வெளியே' தான்இடம்கொடுப்பதாக ஒரு 'திட்டம்' இருக்கிறதாம்.அதன்படிதான் பொதுவாக நியமனங்களும் நடைபெற்றுள்ளன.

ஆனால் —

இதற்குப் 'புறநடை'களும் நடந்திருப்பதை 'புதினம்'நிருபர்கண்டுபிடித்துள்ளார்.

திருநெல்வேலி ஆசிரியகலாசாலையிலிருந்து வெளிவந்தனர்இரண்டு-ஆசிரியர்கள்.

ஒருவர் சற்று வயதானவர். உடல்நிலையும்நன்றாக இல்லை. அவருக்கு புசல்லாவைக்குப் போகும்படி உத்தரவு வந்தது. பாவம் அந்த ஆசிரியர். அவரை இவரைப்பிடித்து அதிகாரிகளிடம் மன்றாடிப்பார்த்தார். ஆனால் கட்டுப்பாட்டை மீறுவதற்கு அதிகாரியின் 'நேர்மை' இடம் கொடுக்கவில்லை.

இன்னொரு ஆசிரியர் இளைஞர். இன்னும் திருமணம் கூட ஆகாத பிரம்மச்சாரி.அவருக்கும் இரத்தினபுரிக்குப் போகும்படி உத்தரவு வந்தது.

அவர் என்ன செய்தாரோ!

திடீரென்று சட்டத்தின் இரும்புப்பிடி தளர்ந்தது! கட்டுப்பாடு உடைந்தது! அந்த இளம் ஆசிரியர் தமது ஊருக்குப்பக்கத்திலுள்ள ஒரு பெரிய கல்லூரிக்கு மாற்றப்பட்டு விட்டார். சற்றும் இளகாத சட்டம், திடீரென்று இப்படி இளகிய இரகசியம் என்னவென்று 'புதினம்' நிருபர் நுணுகி ஆராய்ந்து கண்ட இரகசியம் என்ன தெரியுமா?

அந்த இளம் ஆசிரியர், பெரிய அதிகாரியின் மிக மிக நெருங்கிய உறவினராம்.!

உங்கள்

பாடசாலைப் புத்தகங்கள்

கொப்பிகள்

உபகரணங்கள்

நியாயமான விலைகளில்
நம்பிக்கையுடன்
வாங்குவதற்கு

ஆனந்தா புத்தகசாலை,

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பாலக்காடு

ஆர்.வி.ஜி. பீடிகள்

ஆர்.வி.ஜி.பீடி

புகைக்கப் புகைக்க இன்பம்தருவது
ஆர். வி. ஜி. பீடிகள்
இன்றே புகைத்து இன்பம்
அடையுங்கள்!

ஆர். வி. ஜி. சிங்கம் பீடியை
இப்பொழுது ஆர். வி. ஜி. பீடி
என்று மாற்றியிருக்கிறோம்.
ஆகையால் ஆர். வி. ஜி. பீடி
என்று கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்:

ஆர். வி. ஜி. பீடி கம்பனி,

34. மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348, தந்தி; அச்சகம்.